தினமலர் ஞாயிறு 07-02-2016



# 1948ல் முற்போக்கு சிந்தனை!




கியூபிட்ஸ் அலார்ம்ஸ் அண்டு அதர் ஸ்டோரீஸ் (ஆங்கிலம்)

**ஆங்கிலத்தில்**
விந்தியா

**தமிழில்**
சுந்தரேசன்

**பதிப்பாளர்**
குறிஞ்சி பதிப்பகம்
எல் செரிடோ,
அமெரிக்கா

**பக்கம்:** 205

ஒடிசா மாநிலத்தின் கட்டாக்கில், பேராசிரியராக பணியாற்றியவர், சுந்தரேசன்; காந்தியவாதி. தன் மகளுக்கு, இந்தியா தேவி என, நாட்டின் பெயரையே வைத்தவர். இந்தியா சுதந்திரம் பெற்ற அந்த மாதத்திலேயே, இந்தியா தேவியின் முதல் தமிழ்க்கதை அவரது, 20வது வயதிலேயே 'கலைமகளில்' வெளியாயிற்று.

இந்தியா தேவி, தனக்கு 'விந்தியா' என்ற புனைபெயரைச் சூட்டிக் கொண்டார். அப்போதைய ஆசிரியர், கி.வா.ஜகன்னாதன், இவரது தமிழறிவைக் கண்டு, கலைமகளில் கதைகள் எழுத ஊக்குவித்தார்.

விந்தியா எழுதிய, 10 கதைகள், இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. கல்கியில், 1951, ஆகஸ்டில் வெளியான 'காதல் இதயம்' என்ற கதைக்கு வெளியான சித்திரம், நூலின் அட்டையை அலங்க ரிக்கிறது. கதைகளுடன், அப்போதைய சித்திரங்களும் இடம் பெற்றுள்ளன.

நூலுக்கு, எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன், பொருள்மிகு அணிந்துரை தந்துள்ளார். கதைகள், 1947 முதல், 1960 வரை எழுதப்பட்டவை. ஏழு கதைகள் கலைமகளிலும், கல்கி, ஆனந்தவிகடன், சுதேசமித்திரன் பத்திரிகைகளில் தலா ஒவ்வொன்றுமாக வெளிவந்தவை. அந்நாட்களின் சமூக நிலைப்பாட்டை வைத்துப் பார்த்தால், அவை காலத்தால் மிகவும் முன்னேறியவை என்றே சொல்லலாம்.

மனதை உலுக்கி, வாசகரை நிமிர்ந்து உட்கார வைக்கும் கதை, 'மாதம் பிறந்தது'.

இந்த கதைகளில், இரு பெண்கள்; ஒரு குற்ற மனதுடைய ஆண் வழக்கறிஞர்; இவர்கள் இடையில் நடக்கும் உள்ளுணர்வுப் போராட்டம் மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் இத்தொகுப்பு மனதைத் தொடுகிறது; இவ்வளவு சிறப்பாக அக்காலத்திலேயே கதைகள் எழுதப்பட்டு உள்ளன. அதிலும் அவை முறையாகத் தமிழைப் பயின்றிராத தமிழகத்தில் இருந்து, புலம் பெயர்ந்த ஒரு பெண்மணியால் எழுதப்பட்டுள்ளது போற்றுதலுக்குரிய செயல்பாடு.

எல்லா நூலகங்களிலும், முக்கியமாகப் பள்ளிகளின் நூலகங்களில் வைக்கப்பட வேண்டிய தொகுப்பு; தமிழ் இலக்கியத்திற்கு ஆங்கில மூலம் செய்யப் பட்டிருக்கும் ஒரு சிறந்த மரியாதை. அணிந்துரையில் சொல்லப்பட்டதைப் போல, நூலாசிரியர் விந்தியா என, தமக்குப் பெயர் வைத்துக் கொண்டாலும் நமக்கு இமயமாகவே தென்படுகிறார்!

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இந்த நூல், நேர்த்தியாகவும், அச்சுப் பிழையின்றியும் உள்ளது.

எழுத்தாளர் நரசய்யா